**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 26.08.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **25.08.2021** இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவிலுள்ள பொருத்துநர் நிலை–II இரண்டு பணியிடங்கள், மீட்டர் ரீடர் – ஒரு பணியிடம் ஆகிய தற்காலிகப் பணியிடங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது செயல்முறை ந.க.எண். **6568/09/**எப்**3** நாள் **27.08.2014**–இல் **1.10.2014** முதல் **30.9.15** வரை பணி நீடிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சிக்கு மேற்படி பணியிடங்கள் அவசியம் தேவைப்படுவதால் மேற்படி தற்காலிகப் பணியிடங்கள் **1.10.2015** முதல் **30.09.202*1*** வரை பின்னேற்பும், **1.10.202*1*** முதல் **30.09.202*2*** வரை ஓராண்டிற்கு பணி நீடிப்பு அனுமதியும் மேற்படி பணியிடம் நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால் நிரந்தரமாக வைத்துக் கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** இந்நகராட்சி குடிநீர் பணிகளுக்கு அவசியம் தேவைப்படும் பொருத்துநர் நிலை–II இரண்டு பணியிடங்கள், மீட்டர் ரீடர் – ஒன்று ஆகிய தற்காலிகப் பணியிடங்களை **1.10.2015** முதல் **30.09.202*1*** வரை பின்னேற்பும், **1.10.202*1*** முதல் **30.09.202*2*** வரை மேலும் ஓராண்டிற்கு நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரும் பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**(சி1/1087/19)**

**தீர்மானம் எண். 1072**

அலுவலகக் குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சி பொதுப்பிரிவில் இளநிலை உதவியாளர் பணியிடம் – **1**, தட்டச்சர் – **1**, வருவாய் உதவியாளர் – **1** மற்றும் தங்கும் விடுதி காவலர் – **1** ஆகிய பணியிடங்களை **01.10.2010** முதல் **30.09.2011** வரை தற்காலிகமாக நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறைகள் ஆணை மூ.மு.எண். **49748/2010/**எச்**1** நாள் **04.11.2010**–இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணியிடங்கள் இந்நகராட்சிக்கு அத்தியாவசியமாக தேவைப்படுவதால் **01.10.2011** முதல் **30.09.202*1***வரை பின்னேற்பும் மேலும் ஓராண்டிற்கு **1.10.202*1 முதல் 30.09.2022*** வரை பணி நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும், மேற்படி பணியிடங்கள் நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும் வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மேற்காணும் தற்காலிகப் பணியிடங்கள் இந்நகராட்சிக்கு அவசியம் தேவைப்படுவதால், **01.10.2011** முதல் **30.09.202*1*** வரை பின்னேற்பும் மேலும் ஓராண்டிற்கு **1.10.202*1*** முதல் **30.09.202*2*** வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரியும் மேற்படி

பணியிடங்கள் நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது ஒப்புதல் பெற பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/1086/19)

**தீர்மானம் எண். 1073**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு லாரி ஓட்டுநர் தற்காலிகப் பணியிடம் ஒன்றினை **01.10.2010** முதல் **30.09.2011** வரை ஓராண்டிற்கு நீடித்துக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறைகள் ஆணை மூ.மு.எண். **8269/2010**/ஜே3 நாள் **22.11.2010**–இல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி இந்நகராட்சிக்கு ஓட்டுநர் பணியிடம் தேவையாக உள்ளது. மேற்படி ஓட்டுநர் பணியிடத்தை **01.10.2011** முதல் **30.09.2021** வரை பின்னேற்பும், மேலும் ஓராண்டிற்கு **1.10.2021** முதல் **30.09.2022** வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி கோரியும், தொடர்ந்து நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** பொது சுகாதாரப் பணிகளின் அவசர அவசியம் கருதி **01.10.2011** முதல் லாரி ஓட்டுநர் பணியிடத்தை **30.09.2021** வரை பின்னேற்பும், **1.10.2021** முதல் **30.09.2022** வரை நீடித்து வைத்துக் கொள்ள அனுமதியும், ஓட்டுநர் பணியிடத்தை நிரந்தரமாக நீடித்து வைத்துக் கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணைகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(சி1/1088/19)

**தீர்மானம் எண். 1074**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். **8** மற்றும் **20** ஆகிய பகுதிகளில் கடைநிலையில் குடிநீர் விநியோகம் இல்லாத காரணத்தால் அதனை சரிசெய்ய குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கவும் வார்டு எண். **11** மற்றும் **20** ஆகிய பகுதிகளில் குடிநீர் அல்லாத பிற தேவைக்கான நீர் வசதி அமைத்து நகராட்சி கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி ஏற்படுத்த தயார் உத்தேச செலவினம் ரூ. **1.70** இலட்சம் குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3040/21/இ2)

**தீர்மானம் எண். 1075**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்திலுள்ள கடைகளை குத்தகைக்கு எடுத்து நடத்தி வரும் புதிய பேருந்து நிலைய வணிக சங்க வியாபாரிகள் கொரோனா வைரஸ் பாதிப்பினால் பொது ஊரடங்கு அமலில் இருந்த **24.03.2020** முதல் **07.09.2020** வரையிலான காலங்களுக்கு மாத வாடகையினை தள்ளுபடி செய்யக் கேட்டு மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நீதிப்பேராணை எண். **10697/2021** தொடரப்பட்டதில் நகராட்சிக்கு சார்பாக நாள் **28.04.2021**–ஆம் தேதிய தீர்ப்புரை

வழங்கியுள்ளது. நகராட்சி சார்பாக வாதாடிய திரு பி. சின்னதுரை, வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்குக் கட்டணம் ரூ. 15000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(2113/21/அ2)

**தீர்மானம் எண். 1076**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பழைய ஈப்பு வாகனம் TN 28 V 9848 செயல்பாடற்று இருந்த நிலையில் வாகனத்தை கழிவு செய்வதன் பொருட்டு மண்டல துணை இயக்குநர், அரசு தானியங்கி பணிமனை, சேலம் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது. அதன்படி, வாகனத்தை கழிவு செய்ய இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை அவர்களின் கடிதம் மூ.மு.க.எண். எச்1/7739/2021 நாள் 26.07.2021–இல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, பழைய ஈப்பு வாகனம் TN 28 V 9848–ஐ கழிவு செய்து விற்பனை செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இராசிபுரம் நகராட்சியிலிருந்து குடிநீர் வழங்கும் தலைமை நீரேற்று நிலையம் 55 கி.மீ. தொலைவிலும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் 30 கி.மீ. தொலைவிலும், மாவட்ட ஆட்சியரகம் 40 கி.மீ. தொலைவிலும் உள்ளது. குடிநீர் அத்தியாவசியப் பணிகள் காரணமாக அடிக்கடி தலைமை நீரேற்று நிலையம் செல்வதாலும், ஆய்வுக் கூட்டங்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் மற்றும் மாவட்ட ஆட்சியரகத்திற்கு செல்வதாலும் புதிய ஈப்பு தேவையாக உள்ளது. எனவே, இராசிபுரம் நகராட்சிக்கு புதிய ஈப்பு வாகனம் (Bolero Type) ரூ. 11.60 இலட்சம் மற்றும் வரிகள் உட்பட குடிநீர் வடிகால் நிதியிலிருந்து வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) பழைய வாகனத்தை கழிவு செய்து விற்பனை செய்யவும், புதிய ஈப்பு வாகனம் (Bolero Type) வாங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு முன்மொழிவுகள் அனுப்பியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
இ) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2673/20/இ2)

**தீர்மானம் எண். 1077**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் லாரி TN 28 BZ 9021–ற்கு புதிய டேங்கர் (6000 லிட்டர் கொள்ளளவு) வாங்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பின்வருமாறு.

| வ.எண். | வாகன பராமரிப்பு நிறுவனங்களின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1) | M/s. மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், பி.என்.ரோடு, திருப்பூர் | ரூ. 228400/– |

| | | |
|---|---|---|
| 2) | M/s. காந்தி மோட்டார்ஸ், ஆர்.என். புதூர், ஈரோடு | ரூ. 214500/– |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. காந்தி மோட்டார்ஸ், ஈரோடு என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(2453/21/இ2)**

**தீர்மானம் எண். 1078**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(8) இந்நகராட்சியில் ஓட்டுநராக பணிபுரியும் திரு நா. சங்கர் அவர்கள் தனது உடலில் அறுவை சிகிச்சை செய்துள்ளதால் திருச்செங்கோட்டிலிருந்து வர இயலவில்லை எனவும், தனது குடும்ப சூழ்நிலைக் காரணமாகவும் திருச்செங்கோடு நகராட்சிக்கு பணி மாறுதல் கோரியுள்ளார். எனவே, மேற்படி அன்னாரின் விண்ணப்பம் மேல் நடவடிக்கைக்காக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** திரு நா. சங்கர், ஓட்டுநர் அவர்கள் தனது உடலில் அறுவை சிகிச்சை செய்துள்ளதாலும், தனது குடும்ப சூழ்நிலைக் காரணமாகவும் திருச்செங்கோடு நகராட்சிக்கு பணி மாறுதலில் செல்ல மன்றம் அனுமதிக்கலாம்.

**(3071/21/சி1)**

**தீர்மானம் எண். 1079**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**(9)** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி பதிவு எண். TN 28 AS 0104 என்ற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்திற்கு பணியாணை கடந்த 10.08.2021 அன்று வழங்கப்பட்டது. நிர்வாக காரணமாக மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணியாணை மற்றும் மன்ற அனுமதி (ஒப்பந்தப்புள்ளி) ஆகியவற்றை இரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி வாகனத்தை தயாரிப்பு நிறுவனமான கிரிஸ்டல் மோட்டார்ஸ், சேலம் என்ற நிறுவனத்திற்கு அனுப்பி பழுது நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(2244/21/எச்1)**

**தீர்மானம் எண். 1080**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– சி. கிருபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (கூ.பொ),
இராசிபுரம் நகராட்சி.